**பிரதான விடயங்களடங்கிய ஆவணம் (KFD)**

**தங்கக் கடன்**

**மேர்சன்ட் பேங்க் ஓ.்.ப் ஸ்ரீ லங்கா அன்ட் பினான்ஸ் பீஎல்சீ**

(Merchant Bank of Sri Lanka & Finance PLC)

| பொருள் / சேவைகள் | முக்கிய அம்சங்கள் மற்றும் நன்மைகள் | வட்டி வீதம் மற்றும் ஏனைய அறவீடுகள் | பின்பற்றவேண்டிய நடைமுறைகள் | பிரதான விதிகள் மற்றும் நிபந்தனைகள் | பொருள் / சேவை தொடர்பில் பொருத்தமான சட்டரீதியான ஏற்பாடுகள் | முறைப்பாடுகளைக் கையாளும் முறை |
|---|---|---|---|---|---|---|
| தங்கக் கடன் | அ) 18K-24K ஒரு தங்கப் பவுணுக்கு (8g) ஆகக்கூடிய கடன் தொகை<br><br>ஆ) கவர்ச்சிகரமான குறைந்த வட்டி வீதம்<br><br>இ) எந்தவொரு MBSL கிளைகளிலும் கொடுப்பனவுகளை மேற்கொள்ளலாம்.<br><br>ஈ) சிறிய கடன்களுக்கான கோரிக்கைகளும் ஏற்றுக்கொள்ளப்படும்.<br><br>உ) சிறந்த, விரைவான, சிநேகபூர்வமான சேவை<br><br>ஊ) முன்கூட்டிய அறிவிப்பின்றி பொருட்களை மீட்டுக்கொள்ளும் வசதி<br><br>ஏ) ஈடுவைத்த நகைகளுக்கு இலவச காப்புறுதித் திட்டம்.<br><br>ஐ) எந்தவொரு நபருக்கும் | ஆ) உரிய வட்டி வீதமானது அனைத்துக் கிளைகளிலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. சந்தை நிலைமைகளுக்கேற்ப எமது வட்டி வீதங்கள் காலத்திற்குக் காலம் மீளமைக்கப்படும்.<br><br>ஆ) புதுப்பிக்கும்போது, பகுதியாகச் செலுத்தும்போது, பகுதியாக மீட்கும்போது மற்றும் பொருட்களை மீட்கும்போது திரட்டிய வட்டி அறவிடப்படும்.<br><br>இ) கடன் வழங்கப்பட்ட திகதியை உள்ளடக்கியும், கணக்கு அறிக்கை திகதியை விலக்கியும் உண்மையான நாட்களின் எண்ணிக்கைக்கு வட்டி கணக்கிடப்படும்.<br><br>ஈ) தங்கக் கடன் ஒப்பந்தக் காலம் கடந்ததன் பின்னர் ஒரு | அ) வாடிக்கையாளர் தமது தங்க நகைகளை எடுத்துக்கொண்டு அருகிலுள்ள கிளைக்கு வந்து தங்கக் கடன் உத்தியோகத்தருடன் தமது தேவைகளைக் கலந்துரையாடுதல்.<br><br>ஆ) தங்கக் கடன் உத்தியோகத்தர் தங்க நகையை மதிப்பீடு செய்து வாடிக்கையாளரது தேவைக்கேற்ப கடன் தொகையை அறிவிப்பார்.<br><br>இ) தெரிவுசெய்யப்பட்ட சேவை தொடர்பான கடன் தொகை மற்றும் ஏனைய விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு வாடிக்கையாளர் இணங்கினால், கம்பனியினால் கடன் தொகை வழங்கப்படும். | <u>**தகைமைகள்**</u><br><br>அ) தங்கம் அல்லது தங்க நகைகளை (18 தொடக்கம் 24 கரட் வரை) வைத்திருக்கும் 18 வயதிற்கு மேற்பட்ட இலங்கைப் பிரஜையாக இருத்தல்.<br><br>ஆ) உரிய காலப்பகுதிக்குள் மீட்கப்படாத அனைத்து அடகுகளும், ஈட்டுக்கடன் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய வாடிக்கையாளருக்கு முறையாக எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டதன் பின்னர் ஏலத்தில் விற்கப்படும்.<br><br>இ) அடகு வைக்கப்பட்ட எந்தவொரு பொருளும் காணாமற்போகும் அல்லது சிதைவடையும் சந்தர்ப்பத்தில், கம்பனியினால் அந்நட்டம் ஏற்பட்ட சந்தர்ப்பத்தில் | ஈட்டுக்கடன் சட்டம் மற்றும் ஈட்டுக்கடன் பொறுவோருக்கான கட்டளைச் சட்டம் | எமது வங்கித் தயாரிப்புக்கள் அல்லது சேவைகள் தொடர்பில் வாடிக்கையாளர்கள் தமது முறைப்பாடுகளைச் சமர்ப்பிக்க முடியும்.<br><br>அ) உரிய கிளை முகாமையாளரைத் தொடர்பு கொள்ளுதல்.<br><br>ஆ) வாடிக்கையாளர் முறைப்பாடுகளைக் கையாளும் உத்தியோகத்தரைத் (தொழிற்பாட்டு) தொடர்பு கொள்ளுதல்.<br><br>முறைப்பாடுகள் கிடைத்ததன் பின்னர், நாம் அது கிடைக்கப்பெற்றது எனவும், உடனடியாக எடுத்த நடவடிக்கைகள் தொடர்பில் வாடிக்கையாளருக்கு அறிவிப்போம். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் வசதி.<br><br>ஓ) பல பொருட்கள் ஒன்றாக ஈடுவைக்கப்பட்டிருந்தாலும் அவற்றைத் தனித்தனியாக மீட்டுக் கொள்ளும் வசதி | மாதத்திற்கு 0.5% தொகை தண்டப்பணம் அறவிடப்படும்.<br><br>உ) ஏலத்தினால் ஏற்பட்ட செலவானது ஏலத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட ஒப்பந்தத்திற்காக வெவ்வேறாக அறவிடப்படும்.<br><br>ஊ) பிற நிறுவனமொன்றில் காணப்படுகின்ற கடன்களைப் பொறுப்பேற்பதற்கு (Takeover Business) முழுமையான கடன் தொகையின் 0.25% தொகை முற்கொடுப்பனவாக அறவிடப்படும். | **<u>தேவைப்படும் ஆவணங்கள்</u>**<br>செல்லுபடியான அடையாளங்காணும் ஆவணம் (தேசிய அடையாள அட்டை / செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்) | காணப்பட்ட பெறுமதியின் அடிப்படையில் கொடுப்பனவு செய்யப்படும்.<br><br>ஈ) அடகு நகை ஏலத்தில் விடப்பட்ட சந்தர்ப்பத்தில் அறவிடப்படவேண்டிய முழுமையான தொகையை (அடகு முற்பணம், வட்டி, தண்ட வட்டி, ஏலவிற்பனை கட்டணம்) விட அதிக தொகைக்கு பொருட்கள் விற்கப்பட்டிருந்தால் அது தொடர்பில் வாடிக்கையாளருக்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டதன் பின்னர் உரிய மேலதிக விற்பனைத் தொகையை மீளவும் வாடிக்கையாளருக்கு கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | | |

**“சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் வரையறையை மீறிய கொடுக்கல்வாங்கல்கள் (ஒரு மில்லியனுக்கு மேற்பட்ட) நிதி புலனாய்வு அலகிற்கு அறிக்கையிடப்படும்” “ஒவ்வொரு வாடிக்கையாளரதும் முற்பணம் தொடர்பிலான விபரங்களை இலங்கை கொடுகடன் தகவல் பணியகத்திற்கு (CRIB) அறிக்கை செய்யப்படும்."**